**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8082850

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : Madurai
மாவட்டம்
PS: V&AC
காவல்நிலையம்
Year: 2024
ஆண்டு
FIR No. 04/24
மு.த.அ. எண்
Date: 17.05.2024
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended — Sections பிரிவுகள்: U/S 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: by Prevention of corruption — Sections பிரிவுகள்: as amended by PC
(iii) Act சட்டம்: (amendment) Act 2018 — Sections பிரிவுகள்: (amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to :
நாள் வரை
(1) 15.05.2024 at 1000 hrs
(2) 15.05.2024 at 1600 hrs
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(3) 16.05.2024 at 0930 hrs
(4) 16.05.2024 at 12.15 hrs.
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time :
நேரம் 17.05.2024 at 06.45 hrs
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம் 17.05.2024 at 07.45 hrs.

4. Type of Information : Written/ Oral : Typed complaint.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 3 km North. ward-6, Bill collection office, Kannanendhal, Madurai
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Parasuraman
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Ramasamy
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 01.05.48
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : P.T. Teacher Retired
தொழில்
(g) Address : 759;2, 3rd main Road, 2nd cross st, mahalakshmi Nagar, Kannanendhal, Madurai.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

R. Arumugam, Bill collector, ward-6, Kannanendhal, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

2

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached seperate sheets

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 17/5/2024 [signature] 17/5/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் K.KUMARAGURU
Rank: நிலை Inspector of Police, No. எண் VAC, Madurai.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17.05.2024 at 08.45 hrs.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 17.05.2024-ஆம் தேதி காலை 06.45 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை, கண்ணணேந்தல், மகாலெட்சுமி நகர், இரண்டாவது குறுக்கு தெரு, மூன்றாவது மெயின் ரோடு, நம்பர் 759-2 யைச் சேர்ந்த ராமசாமி மகன் திரு.பரசுராமன் என்பவர் தனது மகன் சரவணக்குமாருடன் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் R.பரசுராமன், வயது 74, த/பெ.ராமசாமி, நம்பர் 759-2, மூன்றாவது மெயின் ரோடு, இரண்டாவது குறுக்கு தெரு, மகாலெட்சுமி நகர், கண்ணணேந்தல், மதுரை 625007. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை, கண்ணணேந்தல், மகாலெட்சுமிநகரில் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி விஜயலெட்சுமி கடந்த 09.08.2021 ஆம் தேதியன்று இறந்துவிட்டார். எங்களுக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு பெண் உண்டு. எனது மூத்தமகன் ஈஸ்வரகண்ணன், தேனியில் எனது உடன்பிறந்த அக்கா திருமதி.R.மூர்த்தியம்மாள் அவர்களின் பெயரில் தேனி G.H.ரோட்டில் உள்ள வீட்டில் அவரது குடும்பத்துடன் குடியிருந்து, டிராவல்ஸ் தொழில் செய்து வருகிறார். எங்களது இரண்டாவது மகன் சரவணக்குமார் M.E., படித்து முடித்துவிட்டு சென்னையில் உள்ள Thyro Care நிறுவனத்தில் PPMC Executive ஆக பணிபுரிந்து வருகிறார். எனது மகள் திவ்யா உடல்நல குறைவால் கடந்த 20.07.2017 ஆம் தேதி இறந்துவிட்டார். கடந்த 12.06.2009 -ஆம் தேதி கண்ணணேந்தல் கிராம UDR சர்வே எண்.93/2B-ல் கட்டுப்பட்ட 3 செண்டு 326 சதுரடி அளவுள்ள மனையிடத்தை சுப்பாரெட்டி அவர்கள் மகன் பாண்டி என்பவரின் பவர் ஏஜெண்ட் நிலையில் மாரிமுத்து மகன் பிரபாகரன் என்பவரிடமிருந்து எனது மனைவி விஜயலெட்சுமி பெயரில் சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 2653/2009 ன்படி கிரையம் செய்தேன். அந்த இடத்தில் கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் சுமார் 963 சதுரடியில் வீடு ஒன்று கட்டினேன். பின்னர் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் கண்ணணேந்தல் வீட்டிற்கு பழைய வரி விதிப்பு எண் 115/520220, புதிய எண் 115/006/901855 -ன்படி எனது மனைவி விஜயலெட்சுமி பெயரில் சொத்து வரி முறையாக செலுத்தி

வருகிறேன். பின்னர் மதுரை கண்ணனேந்தலில் உள்ள வீட்டை எனது மனைவி விஜயலெட்சுமி எங்கள் மூத்த மகன் ஈஸ்வரகண்ணன் அவர்களுக்கு கடந்த 21.02.2019 ஆம் தேதி உயில் சாசனம் எழுதி அதை சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 3/2019 ன்படி பதிவு செய்தோம். அந்த வீட்டை எனது மூத்த மகன் ஈஸ்வரகண்ணன் பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய முடிவெடுத்து, ஈஸ்வரகண்ணனிடம் தெரிவித்தேன். அதன்படி மதுரையில் உள்ள வீட்டு வரியை எனது மனைவி பெயரிலிருந்து மூத்த மகன் ஈஸ்வரகண்ணன் பெயருக்கு மாற்றுவதற்காக நான் எனது மகன் சரவணக்குமாருடன் கடந்த 11.05.2024 ஆம் தேதி மதுரை மாநகராட்சி மண்டலம்-2 அலுவலகத்திற்கு காலையில் சென்று 100 ரூபாய் செலுத்தி, சொத்துவரி பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்தை பெற்று கேட்டபோது, அங்கு 2024-2025 ஆம் ஆண்டு முதல் அரையாண்டிற்கான சொத்துவரி நிலுவையில் இருப்பதால், அதை செலுத்தும்படி கூறினார்கள். அதன்பேரில், நான் மதுரை K.புதூரில் உள்ள கணினி வரி வசூல் மையத்திற்கு சென்று சொத்துவரியாக ரூ.2,687/- செலுத்தி பற்று சீட்டு எண் 115/210/1/24-25/0001814, நாள் 11.05.2024 ஆம் தேதி 12.45 மணிக்கு ரசீது பெற்றேன். பின்னர், அங்கிருந்து மண்டலம்-2 அலுவலகத்திற்கு சென்று சொத்துவரி பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்டபோது, அங்கிருந்தவர் பெயர் மாற்றம் செய்ய கூடிய சொத்து, வார்டு எண் 6 -ல் உள்ளதால், ஆணையூரில் உள்ள கிழக்கு மண்டலம்-1 அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுக்கவேண்டும் என்று கூறி, யார் பெயரில், பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டு, எனது மகன் ஈஸ்வரகண்ணன் பெயரில் Zero Bill வரி நிலுவையில் இல்லை என்ற ஒப்புகைசீட்டு பற்று எண் 115/201/1/24-25/0000549, நாள் 11.05.2024 கணினியிலிருந்து தயார் செய்து ரசீது கொடுத்தார். பின்னர் 13.05.2024 ஆம் தேதி காலையில் எனது மகன் ஈஸ்வரகண்ணன் அந்த விண்ணப்பத்தை நிரப்பி என்னிடம் கொடுத்துவிட்டு, அவருக்கு தேனியில் வேலை இருந்ததால், அவரது சொத்துவரி பெயர் மாற்றத்திற்கான வேலைகளை என்னையும், எனது இளைய மகன் சரவணக்குமாரையும் பார்க்க சொன்னார். பிறகு அன்று மதியம் இரண்டு மணியளவில், நானும் எனது இளைய மகன் சரவணக்குமாரும் ஆனையூர் மண்டல அலுவலகத்திற்கு சென்றோம். அங்கிருந்தவர்கள் ஒரு பெண் அலுவலரிடம் எனது

விண்ணப்பத்தை கொடுக்கச் சொன்னார்கள். நான் எனது மகன் பெயரிலுள்ள சொத்து வரி பெயர்மாற்றத்திற்கான விண்ணப்பத்தை அவரிடம் கொடுத்தேன். எனது விண்ணப்பத்தை வாங்கி பார்த்து விட்டு அந்த அலுவலர் எங்களது வீடு இருக்கும் வார்டிற்கு உரிய பில் கலெக்டர் ஆறுமுகம் என்று கூறி, திரு.ஆறுமுகத்தின் கைப்பேசி எண்ணை எங்களிடம் கொடுத்து விட்டு, உங்களது விண்ணப்பத்தை நம்பராக்கிய பின்னர் கிளார்க் மூலம் பில் கலெக்டரிடம் சென்று விடும். அதனால் நீங்கள் பில்கலெக்டரிடம் பேசிக்கொள்ளுங்கள் என கூறிவிட்டார். உடனே நான் எனது இளைய மகனின் கைப்பேசி எண். 7990485404 என்ற எண்ணிலிருந்து பில் கலெக்டர் திரு. ஆறுமுகம் அவர்களின் கைப்பேசி எண். 9942359281 என்ற எண்ணிற்கு சுமார் 02.30 மணிக்கு போன் செய்து, சொத்து வரி பெயர் மாற்றம் விண்ணப்பம் கொடுத்தது சம்பந்தமாக பேசியவுடன், ஆறுமுகம் அவர்கள் என்னிடம், உங்கள் விண்ணப்பம் என்னிடம் தான் வரும், நாளை (14.05.2024) காலை என்னை கண்ணணேந்தல் கணினி வரி வசூல் மையத்திற்கு வந்து பாருங்கள் என்று கூறினார். பின்பு கடந்த 14.05.2024-ஆம் காலை சுமார் 10 மணியளவில் நானும், இளைய மகனும் கண்ணணேந்தல் கணினி வரி வசூல் மையத்திற்கு சென்று திரு.ஆறுமுகம் அவர்களை சந்தித்து, எனது மகன் ஈஸ்வர கண்ணன் பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய அளித்த விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டபோது அவர், உங்களது விண்ணப்பம் என்னிடம் இன்னும் வரவில்லை, இன்று மாலை தான் கிழக்கு மண்டலம்-1 அலுவலகத்திற்கு சென்று பெற வேண்டும் என்று கூறினார். உடனே நான் எனது இளைய மகனுடன் ஆனையூரில் உள்ள மண்டல அலுவலகத்திற்கு சென்று அந்த பெண் அலுவலரிடம் எனது மகன் பெயரிலுள்ள விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் உங்கள் விண்ணப்பத்திற்கு நம்பர் கொடுத்துவிட்டேன் என தெரிவித்தார். உடனே எனது மகன் சரவணக்குமார் அவரது செல்போனிலிருந்து பில்கலெக்டர் ஆறுமுகத்திற்கு சுமார் 11 மணியளவில் போன் செய்து, எங்களது விண்ணப்பத்திற்கு நம்பர் கொடுத்துவிட்டார்கள் என தெரிவித்தார். அதற்கு ஆறுமுகம் அவர்கள் எனது மகனிடம் நீ எதற்கும் இன்று சாயந்திரம் எனக்கு போன் செய்து, நான் விண்ணப்பத்தை பெற்று கொண்டேனா என தெரிந்து கொள் என கூறிவிட்டார். அதன் காரணமாக எனது மகன் சரவணக்குமார் அன்று மாலை சுமார் 4 மணியளவில் அவரது செல்போனிலிருந்து திரு.ஆறுமுகத்தின்

செல்போனிற்கு தொடர்பு கொண்ட போது திரு.ஆறுமுகம், உங்களது விண்ணப்பம் என்னிடம் வந்துவிட்டதா என பார்த்து விட்டு சொல்கிறேன் என கூறி தொடர்பை துண்டித்து விட்டார். பின்னர் சுமார் 5 நிமிடங்கள் கழித்து திரு.ஆறுமுகம் அவரது செல்போனிலிருந்து எனது மகன் சரவணக்குமாரின் செல்போனிற்கு தொடர்பு கொண்டு அவரிடம், உங்களது விண்ணப்பம் என்னிடம் வந்து விட்டது, நான் உங்களது வீட்டை பார்க்க வேண்டும் எனவே நாளை (15.05.2024) காலை 9.30 மணிக்கு எனது அலுவலகத்திற்கு வந்து, என்னை கூட்டிச் சென்று உங்களது வீட்டை காண்பியுங்கள் என கூறினார். அதன் பிரகாரம் நேற்று 15.05.2024-ஆம் தேதி நானும், எனது இளையமகன் சரவணக்குமாரும் திரு.ஆறுமுகம் கூறியபடி காலை சுமார் 9.30 மணிக்கு கண்ணணேந்தலில் உள்ள கணினி வரி வசூல் மையத்திற்கு சென்று திரு.ஆறுமுகம் அவர்களை பார்த்தோம். அவர், அவருக்கு துணையாக அங்கிருந்த அற்புதம் என்பவரை அழைத்துக் கொண்டு எங்களது வீட்டிற்கு வந்து எங்களது வீட்டை பார்வையிட்டார். திரு.ஆறுமுகமும், அற்புதமும் சேர்ந்து எங்களது வீட்டை அளந்து பார்த்தார்கள். பிறகு திரு.ஆறுமுகம், அன்று காலை 10 மணியளவில் தனியாக அவர் மட்டும் என்னிடம் வந்து, எனது வீட்டில் வைத்து, எனது வீட்டின் சொத்து வரி பெயர் மாற்றம் செய்வதற்கு, பரிந்துரை செய்து, ஏற்பாடு செய்து தருவதற்கு, தனக்கு தனியாக ரூ.20,000/- கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நான் எனது வீட்டின் சொத்து வரி சம்பந்தமாக அனைத்து கட்டணங்களையும் முறையாக செலுத்தி வருகிறேன். நீங்கள் கேட்கும் ரூ.20,000/- அரசுக்கு செலுத்த வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு திரு.ஆறுமுகம் அவர்கள் இது அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் இல்லை, எனது செலவிற்கான பணம் என்று கூறினார். நான் அவரிடம் நான் ரிடையர்டு ஆகி, வீட்டில் சும்மாதான் இருக்கிறேன். அவ்வளவு பணம் என்னிடம் இல்லை, எனது மகன் ஈஸ்வரகண்ணன் அவர்களிடம் தான் கேட்கவேண்டும், தொகை அதிகமாக உள்ளது என்று கூறினேன். அதற்கு அவர், சரி உங்களுக்காக ஐந்தாயிரம் ரூபாய் குறைத்துக் கொள்கிறேன். மீதி ரூ.15,000/- கொண்டு வந்து கொடுத்தால், உடனே ஏற்பாடு செய்து விடுகிறேன். நீங்கள் பணம் கொடுக்காவிட்டால், அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என கூறிவிட்டு சென்று விட்டார். இத்தகவலை எனது மகன் ஈஸ்வரகண்ணனிடம் தெரிவித்தேன். அவன் வருத்தப்பட்டான். நான் வேலையாக உள்ளேன், நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்.

பிறகு அன்று மதியம் சுமார் 12.15 மணிக்கு ஆறுமுகம் அவர்களுடன் வந்த திரு.அற்புதம் அவர்கள் எனது மகன் சரவணக்குமாரின் செல்போனுக்கு அவரது செல்போன் எண். 88707 48288 என்ற எண்ணிலிருந்து தொடர்பு கொண்டு, நீங்கள் எப்போது எங்களது அலுவலகத்திற்கு வருகிறீர்கள் என ஆறுமுகம் அவர்கள் கேட்க சொன்னார் என கூறினார். அவரிடம் எனது மகன் சரவணக்குமார் அப்பா வெளியே சென்றுள்ளார். அவரை அழைத்துக் கொண்டு நாளை காலை வருகிறேன் என கூறியிருக்கிறார். இத்தகவலை நான் வெளியிலிருந்து வீட்டிற்கு வந்தவுடன் எனது மகன் என்னிடம் தெரிவித்தார். உடனே அன்று மதியம் 2 ½ மணியளவில் நான் எனது செல்போன் எண் 9943434557 என்ற எண்ணிலிருந்து பில் கலெக்டர் திரு.ஆறுமுகத்தை தொடர்பு கொண்டு, அவரிடம் நான் பணம் புரட்டுவது சிரமமாக உள்ளது எனவே சற்று குறைத்து கொள்ளுங்கள் என கேட்டேன். அதற்கு அவர் சரி பார்த்துக் கொள்ளலாம் என சொல்லி போனை வைத்து விட்டார். பின்னர் மீண்டும் மதியம் சுமார் 3 ½ மணிக்கு திரு.ஆறுமுகம் அவர்கள், எனது செல்போனிற்கு தொடர்பு கொண்டு, உங்களது மகனை என்னிடம் பேச சொல்லுங்கள் என சொல்லி வைத்து விட்டார். பின்னர் வெளியில் சென்றிருந்த எனது மகன் சரவணக்குமார் வீட்டிற்கு வந்தவுடன் அவரிடம் இத்தகவலை தெரிவித்து, திரு.ஆறுமுகத்துடன் பேசக்கூறி எனது செல்போனிலிருந்து திரு.ஆறுமுகத்தின் செல்போன் எண்ணிற்கு சுமார் 16.00 மணியளவில் தொடர்பு கொண்டேன். அவர் என் மகனிடம் நாளை (16.05.2024) காலையில் பணத்துடன் உனது தந்தையை அழைத்துக் கொண்டு வா" என கூறியிருக்கிறார். அதன் பிரகாரம் 16.05.2024 ஆம்.தேதி காலை சுமார் 9.30 மணிக்கு நான் எனது மகனுடன் திரு.ஆறுமுகத்தின் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த ஆறுமுகத்தை சந்தித்தேன். அப்போது அவர் நான் கேட்ட பணத்தை கொண்டு வந்து இருக்கிறீர்களா என கேட்டார். அதற்கு நான் அவரிடம் என்னால் பணத்தை இன்னும் ரெடிபண்ண முடியவில்லை, ரொம்ப கஷ்டமாக உள்ளது என கூறினேன். அதற்கு ஆறுமுகம் அவர்கள் சரி ரூபாய் ஐந்தாயிரம் குறைத்துக் கொள்கிறேன், ரூபாய் பத்தாயிரத்துடன் இன்று மதியம் 12 மணிக்கு என்னை நேரில் வந்து அலுவலகத்தில் சந்தித்து கொடுக்க வேண்டும், இல்லை என்றால் நான் வேறு வேலை பார்க்க சென்றுவிடுவேன் என்று கறறாக கூறினார். என்னால் பணம் ஏற்பாடு செய்ய முடியாத காரணத்தால் சுமார் 12 ¼

மணிக்கு எனது செல்போனிலிருந்து திரு. ஆறுமுகத்தை அவரது செல்போனை தொடர்பு கொண்டு, நீங்கள் கேட்ட பணத்தை ஏற்பாடு செய்ய முடியவில்லை என கூறினேன். அதற்கு அவர் பணம் கொடுக்கவில்லை என்றால் உங்கள் விண்ணப்பம் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. நீங்கள் அலைந்து கொண்டேதான் இருக்க வேண்டும், எனவே நீங்கள் நாளை (17.05.2024) காலையில் ரூபாய் பத்தாயிரத்தை உடன் எனது அலுவலகத்தில் வந்து என்னிடம் கொடுத்தால்தான், நான் உடனே உங்களது வீட்டிற்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய எனது பரிந்துரையை செய்து, அதன்பேரில் உங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யமுடியும் என கண்டிப்பாக கூறிவிட்டார். நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தேன், தனது கடமையை செய்ய பில் கலெக்டர் திரு.ஆறுமுகம் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே எனது மனைவி விஜயலெட்சுமி பெயரிலிருந்து எனது மூத்த மகன் திரு. ஈஸ்வர கண்ணன் பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்வதற்கு, பரிந்துரை செய்து, ஏற்பாடு செய்து தருவதற்கு, என்னிடம் ரூ.10,000/- லஞ்சம் கேட்கும் மதுரை மாநகராட்சி வார்டு எண். 6 பில்கலெக்டர் திரு.ஆறுமுகம் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு இம்மனுவை தயார் செய்து எனது மகன் சரவணக்குமாருடன் வந்து தங்களிடம் கொடுக்கிறேன். இத்துடன் எனது எனது மனைவி பெயரிலுள்ள கிரைய ஆவண எண். 2653/2009, எனது மூத்த மகன் ஈஸ்வர கண்ணன் பெயரிலுள்ள உயில் ஆவண எண். 3/2019, எனது மனைவியின் இறப்புச் சான்று, வாரிசு சான்று, எனது மனைவி பெயரில் 19.01.2024 மற்றும் 11.05.2024 தேதியிட்ட பழைய வரி விதிப்பு எண் 115/520220, புதிய எண் 115/006/901855 பற்றுச்சீட்டு மற்றும் எனது மூத்த மகன் பெயரில் 11.05.2024-ஆம் தேதியிட்ட வரி விதிப்பு எண். 115/201/1/24-25/0000549 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும் பில்கலெக்டர் திரு.ஆறுமுகம் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள, XXXXXX (R.பரசுராமன்) 17.05.2024.

Sir, Received the complaint on 17.05.2024 at 06.45 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused

were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai Vigilance and Anti-Corruption Cr.No. 04/2024 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 07.45 hrs and took up investigation. Sd./-XXXX (K.Kumaraguru) 17.05.2024, Inspector of Police, V & AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.R.Parasuraman, S/o.Ramasamy, No.759-2, 3rd Main road, 2nd Cross street, Mahalakshmi Nagar, Kannanenthal, Madurai 625007 along with xerox copies of Document No. 2653/2009, dated 12.06.2009 and will document No. 3/2019, dated 21.02.2019, Death Certificate of Vijayalakshmi, Legal Heir Certificate, Property Tax receipt dated 19.01.2024 and 11.05.2024 in the name of Vijayalakshmi and name transfer of property receipt dated 11.05.2024 in the name of Tr.Eswarakannan are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

17/5/2024
(K.Kumaraguru)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.